தினமணி

25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிர்கள் அழுகும் அபாயம்: விவசாயிகள் கவலை

First Published : 06 Dec 2010 12:46:31 AM IST



பலத்த மழையால் கடலூர் வேளாண் பல்கலைக்கழக கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் மூழ்கிய நெல் பயிர்.

கடலூர், டிச. 5: கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்கள், 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தண்ணீரில் மூழ்கி அழுகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

÷கடலூர் மாவட்டத்தில் சுமார் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி பாசனம் மூலம் பயன் பெறுகின்றன. ÷வழக்கமாக ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை பாசனத்துக்குத் திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு ஜூன் 28-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளுக்கு, கொள்ளிடம் கீழணையில் இருந்து ஆகஸ்ட் 7-ம் தேதி தான் தண்ணீர் திறக்கப்பட்டது.

தாமதமாக தண்ணீர் கிடைத்ததால், கடலூர் மாவட்டக் கடைமடைப் பகுதிகளில் கடந்த 10 தினங்களுக்கு முன்புதான், சம்பா நடவுப் பணிகள் முடிவடைந்தன. சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல் நட்டு 10 முதல் 15 நாள்கள் பயிராக உள்ளன.

கடலூர் மாவட்டத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைவிட, சேலம் உள்ளிட்ட மேற்கு மாவட்டங்கள் மற்றும் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பெய்த மழையினால், கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும் மிகவும் அதிகம் என்று, விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷பிற மாவட்டங்களில் பெய்த மழை, வெள்ளாறு, பரவனாறு, உப்பனாறு, கருவாட்டு ஓடை, செங்கால் ஓடை, மணிமுத்தாறு, கெடிலம், பெண்ணையாறு ஆகியவற்றின் வழியாகப் பாய்ந்து

ஓடி, வடிகால் வசதியற்ற கடலூர் மாவட்டத்தை வெள்ளக் காடாக மாற்றி விட்டது. இதனால் 250 கிராமங்களில் வெள்ளம் புகுந்தது.

÷கடலூர் டெல்டா பாசனப் பகுதிகளில் திருநாரையூர், எடையார், பிள்ளையார் தாங்கல், வையூர், கண்டியமேடு, அகரநல்லூர், பெராம்பட்டு, கீழத்திருக்கள்ளிப் பாலை, கோவிலாம் பூண்டி, மீதிக்குடி, கீழ் அணுவம்பட்டு, மடுவங்கரை, நஞ்சைமகத்து வாழ்க்கை, கீழச்சாவடி, பூவாலை, வயலாமூர், எல்லைகுடி, கல்குணம், சின்ன குமட்டி, பி.முட்லூர், கொமட்டிக் கொல்லை மற்றும் இக்கிராமங்களை அடுத்துள்ள பகுதிகளில், 10 முதல் 15 நாள் நெல் பயிர்கள், 8 முதல் 10 நாள்களாகத் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. இவை 90 சதவீதம் அழுகி வீணாகி விடும் என்கிறார்கள் விவசாயிகள்.

÷இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""வடகிழக்குப் பருவ மழையால் கடலோர மாவட்டங்களில் இந்த ஆண்டு நல்ல மழை இருக்கும் என்று, வானிலை ஆய்வு மையத் தகவலை மேற்கோள் காட்டி, மேட்டூர் அணையே முன்னரே திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரினோம். மேலும் கடலூர் மாவட்டத்தில் பெய்யும் மழையைவிட பிற மாவட்டங்களில் பெய்யும் மழையால், வடிகால் வசதியற்ற, கடலூர் மாவட்ட கடைமடைப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் வாய்ப்பு உள்ளது என்று எச்சரித்தோம்.

÷ஆனால் அதிகாரிகள் எங்கள் ஆலோசனையை புறம் தள்ளினர்.நாங்கள் பயந்தபடி நடந்து விட்டது. சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. 25 ஆயிரம் ஏக்கரில் மூழ்கி இருக்கும் பயிர்கள் தேறாது, அழுகிவிடும்'' என்றார்.

**கிராக்கியால் தொடரும் விலை உயர்வு; பாதுகாப்புப் பட்டறையில் சின்ன வெங்காயம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 06 Dec 2010 04:27:18 AM IST



சின்ன வெங்காய பாதுகாப்புப் பட்டறை. பட்டறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சின்ன வெங்காயம்

தாராபுரம்: சமையலில் அதிகம் பயன்படுத்தப்படும் சின்ன வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, நுகர்வோரை கவலைக்குள்ளாக்கினாலும், விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. கிராக்கியால் விலை உயர்ந்து வருவதால், பாதுகாப்புப் பட்டறைகளில் இருப்பு வைக்கப்பட்ட சின்ன வெங்காயம், விவசாயிகளுக்கு லாபம் அளித்து வருகிறது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்துக்கு உள்பட்ட குண்டடம், மேட்டுக்கடை, காதப்புள்ளப்பட்டி, நஞ்சியம்பாளையம், உப்பாறு அணை, கெத்தல்ரேவ், பொன்னாபுரம், நாரணபுரம், தாசப்பட்டி, கொட்டமுத்தாம்பாளையம், கொளத்துப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது.

வெங்காயம் வரத்து அதிகரிக்கும் சூழலில், சின்ன வெங்காயத்தின் விலை சரியும். அப்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே, தோட்டத்தில் பட்டறை அமைத்து, மூன்று மாதம் வரை சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்கின்றனர்.

÷இதற்காக, மூங்கில், ஓலைகளைக் கொண்டு, வெங்காயப் பட்டறைகளை அமைக்கின்றனர். இதுபோன்ற பட்டறை அமைப்பதற்கு ரூ.50 ஆயிரம் வரை செலவாகிறது. மேலும், வெங்காயம் நன்றாகக் காய்ந்து எடை குறைகிறது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.12-க்கு விற்பனையானது. இப்போது படிப்படியாக விலை உயர்ந்து, ரூ.40 வரை சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது. பட்டறை அமைத்து, வெங்காயத்தை இருப்பு வைத்த விவசாயிகள், விலைஉயர்வு காரணமாக மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து புதிய அமராவதி பாசன சங்கத் தலைவர் பார்த்தசாரதி கூறியது:

÷தாராபுரம் வட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 10 மாதங்கள் வரை சின்ன வெங்காயத்தை சாகுபடி செய்கின்றனர்.

தற்போது மழை பெய்துள்ளதால், பயிரிடப்பட்டுள்ள பெருமளவிலான வெங்காயம், அழுகி விட்டது. எனவே, சின்ன வெங்காயத்துக்கு தட்டுப்பாடும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. சின்ன வெங்காயத்தின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளதால், பாதுகாப்புப் பட்டறையில் வைத்து, மழையிலிருந்து வெங்காயத்தை காப்பாற்றி வருகின்றனர்.

சின்ன வெங்காயத்தைப் பாதுகாக்க, அரசு சார்பில் குளிர்சாதன வசதி கொண்ட கிடங்குகளை அமைக்க வேண்டும். திருப்பூர் மாவட்டம், பொங்கலூரில் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பது தொடர்பாக, வேளாண் பல்கலைக்கழகம் ஆய்வு நடத்தியுள்ளது.

÷தாராபுரம் பகுதியிலும் குளிர்சாதனக் கிடங்கு அமைக்க வேண்டும் என்று, தாராபுரம் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தாராபுரத்தில் குளிர்சாதனக் கிடங்கு அமைத்தால், இப்பகுதியில் வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடும் விவசாயிகள் பெரிதும் பயனடைவர் என்றார்.

மழை காரணமாக பெருமளவு பரப்பில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயம் அழுகி சேதமடைந்தாலும், பட்டறைகளில் வைத்துக் காப்பாற்றிய வெங்காயம், நல்ல விலைக்கு விற்பனையாவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பயிர் காப்பீடு திட்டம்: விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதில் தயக்கம் காட்டக் கூடாது - ஆட்சியர்**

First Published : 05 Dec 2010 10:25:43 AM IST

திண்டுக்கல், டிச. 4: பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதில் தயக்கம் காட்டக்கூடாது என, தனியார் வங்கிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை, மாவட்ட ஆட்சியர் அரங்கில் ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆட்சியர் மா. வள்ளலார் பேசியதாவது:

விவசாயிகளின் பிரச்னைகளை ஆராய்ந்து உரிய முறையில் தீர்வு காண, மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 771 மி.மீ. ஆனால், இதுவரை 1006 மி.மீ. வரை மழை பெய்துள்ளது. 391 மி.மீ. அதிகமாக மழை பெய்துள்ளது மகிழ்ச்சியான விஷயம்தான்.

எனினும், மழையினால் சேதமடைந்த பயிர், சாலை விவரங்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், குடகனாறு அணையில் தற்போது உள்ள ஷட்டர்களுக்கு முன்பு பெரிய தடுப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்பு தடுப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், தூர் வாரப்பட்டு, கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஒட்டன்சத்திரம் பொது குளத்தில் நகராட்சியினர் குப்பைகள் கொட்டுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சில தனியார் வங்கிகளில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்கின்றனர். ஆனால், இழப்பீடு வழங்கும்போது ஏதாவது காரணம் சொல்லி தட்டிக் கழிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் நலன் பரிசீலனை செய்யக் கூடியதாகும். எனவே, பயிர் காப்பீடு திட்டத்தில் இழப்பீடுகள் வழங்க தயக்கம் காட்டக் கூடாது.

மேலும், துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியம், விரைவில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

**பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேளாண்துறை முடிவு**

First Published : 05 Dec 2010 11:17:39 AM IST

உடுமலை, டிச. 4: ரபி பருவம் 2010ல் திருப்பூர் மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்தை இப்கோ போக்கியோ பொதுக் காப்பீட்டுத் திட்டம் மூலம் செயல்படுத்த முடிவு வேளாண்துறை முடிவு செய்துள்ளது.

அதிக அளவு அல்லது குறைந்த அளவு மழை, வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் ஆகிய வானிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பிட்ட அளவுகளைத் தாண்டும்போது இழப்பீடு கிடைக்கும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டார அளவிலும் நிறுவப்பட்டுள்ள, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் இந்திய வானிலைத் துறையின் அங்கீகாரம் பெற்ற தானியங்கி வானிலை நிலையங்களில் தினசரி பதிவாகும் அளவுகளை கணக்கில் கொண்டு இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயிருக்கும் அதன் தன்மைக்கேற்ப காப்பீடுத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் காப்பீடு செய்யும் காலத்தை மூன்று இல்லது நான்கு நிலைகளாகப் பிரித்து ஒவ்வொரு நிலையிலும் குறிப்பிட்ட அளவை விட மழை அதிக அளவில் பதிவானாலோ அல்லது குறைந்த அளவில் பதிவானாலோ இழப்பீடு வழங்கப்படுகிறது.

மேலும் 28 நாட்களுக்கு தொடர் வறட்சி நாட்கள் இருப்பின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அதற்கும் இழப்பீடு வழங்கப்படுகிறது. இந்த ரபி பருவத்தில் மக்காச்சோளம், பயிறு வகைகள், நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களுக்கு வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மக்காச்சோளம் காப்பீட்டுத் தொகை ரூ. 10 ஆயிரத்திற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ஒரு ஏக்கருக்கு ரூ. 221, பயிறு வகைகள் காப்பீட்டுத் தொகை ரூ. 5 ஆயிரத்திற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ஒரு ஏக்கருக்கு ரூ. 110,

நிலக்கடலை காப்பீட்டுத் தொகை ரூ. 12,500க்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ. 221, பருத்தி (இறவை) காப்பீட்டுத் தொகை ரூ. 12,500க்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ. 827, பருத்தி (மானாவாரி) காப்பீட்டுத் தொகை ரூ. 10 ஆயிரத்திற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ. 662.

மேலும் இக் காப்பீட்டுத் திட்டத்திற்கான படிவங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்கும். அனைத்து விவசாயிகளும் இக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மரவள்ளி பயிர் விவசாயிகள் கூட்டம்**

First Published : 05 Dec 2010 03:00:35 PM IST

விருத்தாசலம், டிச. 4: விருத்தாசலம் அடுத்த அடரி கிராமத்தில், மரவள்ளிக் கிழங்கில் பாதிப்பை ஏற்படுத்தும் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்துவது குறித்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் வேளாண்மை நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா.சுப்பிரமணியன் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள், மரவள்ளி தோட்டங்களைப் பார்வையிட்டு, மாவுப்பூச்சி தாக்குதல் உள்ள வயல்களில் அப்ஸரோஃபேகஸ் பப்பாயே எனும் ஒட்டுண்ணி குளவியை அறிமுகப்படுத்தினர். இக்குளவியை ஒருமுறை வயல்களில் விட்டால் அது விரைவில் இனப்பெருக்கம் செய்து வயல்களில் உள்ள மாவுப்பூச்சிகளை தாக்கி அழிக்கும் என்று தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் வேளாண் விஞ்ஞானிகள் அருட்செந்தில், தனுஷ்கோடி, இந்திராகாந்தி மற்றும் மரவள்ளி விவசாயிகள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

**91,500 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய இலக்கு**

First Published : 05 Dec 2010 01:34:35 PM IST

கரூர், டிச. 4: தமிழகத்தில் 91,500 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் தமிழ்நாடு விதைச்சான்று துறை இயக்குநர் த. கோபாலகிருஷ்ணன்.

கரூர் விதைப் பரிசோதனை நிலையத்தில் அண்மையில் ஆய்வு மேற்கொண்ட அவர் மேலும் கூறியது:

விதைப்பதற்கு முன்பே விவசாயிகள் விதையின் தரத்தைத் தெரிந்து கொள்வது அவசியம். இதையொட்டியே, தமிழகத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 18 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

விதை சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 29 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் மூலமாக நிகழாண்டில் 91,500 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசால் அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களில், விவசாயிகளின் வயல்களில் உற்பத்தி செய்யப்பட்டு, விதை சுத்தி நிலையங்களில் சுத்தி செய்யப்பட்டு, விதைச்சான்று அலுவலர்களால் சான்று விதை மாதிரிகள் எடுத்து அனுப்பப்படும்.

மேலும், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் தங்களிடமுள்ள விதைக்குவியலின் தரத்து அறிந்து கொள்ள தாங்களாக முன்வந்து அனுப்பும் விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படும் என்றார் அவர்.

முன்னதாக, கோபாலகிருஷ்ணன் ஆய்வு மேற்கொண்ட போது, விதைப் பரிசோதனை ஆய்வகத்தின் செயல்பாடுகளையும், இலக்கு, சாதனை விவரங்களையும் மூத்த வேளாண்மை அலுவலர் அ. வெங்கட்ராமன் அவருக்குத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, கோவை விதைச்சான்று இயக்கக விதை ஆய்வு இணை இயக்குநர் ஆ. கோபால், கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கி. ஜெகதீசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் சேர அழைப்பு**

First Published : 05 Dec 2010 02:01:51 PM IST

பேராவூரணி, டிச. 4: தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் சேர்ந்து பயன்பெறலாம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். மதியரசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பருவ மழையினால் வெள்ளச்சேதம் ஏற்பட்டு அதனால் சம்பா பருவ நெல் பயிருக்கு இழப்பு ஏற்படும் நிலை உருவானால், அதுபோன்ற இழப்புகளுக்கு நிவாரணம் பெற விவசாயிகளுக்காக கொண்டுவரப்பட்ட திட்டமே தேசிய வேளாண் பயிர்க் காப்பிட்டுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தில் சேர 1.8.2010 முதல் 30.11.2010 முடிய சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இந்தத் திட்டத்தில் கூட்டுறவு கடன்வசதி பெற்ற விவசாயிகள் கடன் வசதி பெறாத விவசாயிகளும் சேர்ந்து பயன்பெறலாம்.

ஒரு ஏக்கருக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் 55 சத மானியம் போக ரூ. 117 மட்டும் பிரிமியமாக சிறு, குறு விவசாயிகள் செலுத்தினால் போதும். இதர விவசாயிகள் 50 சத மானியம் போக ரூ. 130 செலுத்த வேண்டும். பிரிமீயத் தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ செலுத்தலாம். இந்தத் திட்டத்தில் சேர கடன் பெறாத விவசாயிகளுக்கு 15.12.2010 ஆம் தேதி கடன் பெற்ற விவசாயிகளுக்கு

31.12.2010 ஆம் தேதி கடைசி நாளாகும். மேலும், விவரங்களுக்கு அந்தந்தப் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**சின்ன வெங்காய பயிர்கள் சேதம்**

First Published : 05 Dec 2010 12:26:42 PM IST

ராசிபுரம், டிச. 4: ராசிபுரம் பகுதியில் பெய்த தொடர் மழையால் சின்ன வெங்காய பயிர்கள் சேதமடைந்தன.

ராசிபுரம், வெண்ணந்தூர், அத்தனூர், நடுப்பட்டி, சப்பையாபுரம், அலவாய்ப்பட்டி, பட்டணம், வடுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளன.

இங்கு விளையும் சின்ன வெங்காயம் கோவை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பொள்ளாச்சி, தருமபுரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சந்தைக்கு அனுப்பப்படுவது வழக்கம்.

தற்போது பெய்து வரும் மழையால் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ள வயல்வெளிகளில் நீர்தேங்கி, பயிர்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உரமிடுவது உள்ளிட்ட பராமரிப்பு பணிகள் செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

அறுவடை செய்யும் நிலையில் உள்ள வெங்காயத்தையும் அறுவடை செய்ய முடியவில்லையாம்.

ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் வரை செலவிட்டுள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தொடர் மழையால் பாதிக்கப்பட்ட வெங்காய விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும். வெங்காயத்துக்கு போதிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**தி.மலை மாவட்டத்தில் தொடர் மழையால் 1000 ஹெக்டேர் பயிர்கள் சேதம்**

First Published : 05 Dec 2010 12:08:46 PM IST

திருவண்ணாமலை, டிச.4: திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் 1000 ஹெக்டேர் விவசாய நிலங்களில் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்று ஆட்சியர் மு.ராஜேந்திரன் தெரிவித்தார்.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு இடங்களில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழை சேதம் குறித்து ஆட்சியர் ராஜேந்திரன் சனிக்கிழமை பல்வேறு இடங்களை பார்வையிட்டார்.

திருவணணாமலை அடுத்த சு.பள்ளியம்பட்டு கிராமத்தில் மழையால் நெற்பயிர்கள், மணிலா உள்ளிட்டவை சேதம் அடைந்தது குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மழையால் நிரம்பிய ஏரி, மதகு வரத்துக் கால்வாய்களை பார்வையிட்டார்.

பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியது:மாவட்டத்தில் சராசரியாக 1000 மி.மீ மழை பதிவாகும். நடப்பாண்டு 1100 மி.மீமழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் 2600 கி.மீ நீளத்துக்கு சாலை உள்ளன. இவற்றில் 600 கி.மீ தூர சாலைகள் சேதமடைந்துள்ளன.

இவற்றை புனரமைக்க 52 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.வந்தவாசி, ஆரணி வட்டங்கள் அதிகஸ்ரீக் பாதிப்படைந்துள்ளன. 500 ஹெக்டேர் நெல் பயிரும், 500 ஹெக்டேர் மணிலா, ஆருத்திராபட்டில் 50 ஹெக்டேர் உளுந்து பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரளவு பாதிக்கப்பட்ட நிலத்துக்கு ஏக்கருக்கு 2 ஆயிரமும், அதிகம் பாதிக்கப்பட்டநிலத்துக்கு 4 ஆயிரமும் வழங்கப்படும்.

310 ஏரிகள் நிரம்பின

மாவட்டத்தில் மொத்தமுள்ள 610 ஏரிகளில் 310 ஏரிகள் நிரம்பியுள்ளன. 25 ஏரிகளில் 75 சதவீதம் அளவுக்கு நீர் உள்ளது. ஏரிகளில் உடைப்புகளை பழுது பார்க்க போர்க்கால அடிப்படை பணிகள் நடந்து வருகினறன.

மழையால் மாவட்டம் முழுதும் 1500 வீடுகள் இடிந்துள்ளன. முழு சேதத்துக்கு 5 ஆயிரமும், ஒரளவு சேதத்துக்கு 1500-ம் தரப்படுகிறது. 10 கிலோ அரிசி, 2 லிட்டர் மண்ணெண்ணெய், வேட்டி-சேலையும் தரப்படுகின்றன.

மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணை, குப்பநத்தம் அணைகள் நிரம்பி விட்டன. மேலும் மிருகண்டா நதி அணை, செண்பகத்தோப்பு அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. மழை பாதிப்பு குறித்து வருவாய், வேளாண் துறை அதிகாரிகள் தரும் தகவல் அடிப்படையில் அரசுக்கு அறிக்கை அனுப்புவோம் என்றார் ராஜேந்திரன்.

**744 கால்நடைகளுக்கு சிகிச்சை**

First Published : 05 Dec 2010 12:22:59 PM IST

குடியாத்தம், டிச. 4: குடியாத்தம் அடுத்த அனுப்பு கிராமத்தில், வேலூர் மண்டல கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், வியாழக்கிழமை நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 744 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முகாமை பரதராமி கால்நடை உதவி மருத்துவர் கே. மணி தலைமையில், எம்எல்ஏ ஜி. லதா துவக்கி வைத்தார்.

கால்நடை மருத்துவர்கள் தி. ரஞ்சித் விமல்ராஜ், து. காந்திமதி, கால்நடை ஆய்வாளர் எம்.பி. உமாபதி உள்ளிட்டோர் சிகிச்சை அளித்தனர்.

**வயல்வெளிப் பள்ளி பயிற்சி**

First Published : 05 Dec 2010 11:57:33 AM IST

செய்யாறு,டிச.4: செய்யாறை அடுத்த கொடநகர் கிராமத்தில் விவசாயிகளுக்கு வயல்வெளிப் பள்ளி பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு பயிற்சியைவயல்வெளிப் பள்ளி மூலம் கொடநகர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியின்போது பயிருக்கு விஷ மருந்துகளை தெளிப்பதன் மூலம் பல நன்மை தரும் பூச்சிகளை அழிந்து விடுகிறோம். முடிந்த வரை மருந்து தெளிக்காமல் ஒருங்கிணைந்தமுறையில் பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் தேர்வு செய்வதுடன், விதை நேர்த்தி வயல்களை சுத்தமாக வைத்து கொள்வது, வேப்ப எண்ணெய் மருந்துகளை பயன்படுத்தி தீமை செய்யும் பூச்சிகளை விரட்டியடிக்க செய்வது போன்ற முறைகளுடன் இனக் கவர்ச்சி பொறி ஒட்டுண்ணிகளை பயன்படுத்துவது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமையில் வேளாண்மை அலுவலர்பாலமுருகன், பாதுஷா, ராஜலட்சுமி ஆகியோர் கொண்ட குழு இப்பயிற்சியை அளித்து வருகின்றனர்.

**டிச. 15 வரை நெற்பயிருக்கு காப்பீடு: அதிகாரி**

First Published : 05 Dec 2010 11:16:25 AM IST

திருவாடானை டிச. 4: திருவாடானை தாலுகாவில் டிச. 15-ம் தேதிக்குள் விவசாயிகள் நெற் பயிருக்கு காப்பீடு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, ஆர்.எஸ். மங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் தெரிவித்த விவரம்:

திருவாடானை தாலுகா அளவில், சுமார் 1 லட்சத்து 8 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது.

மழை, வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால் பயிர்கள் அழிந்து இழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க மத்திய, மாநில அரசுகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை கடந்த 3 ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றன.

அதேபோல, இந்த ஆண்டும் திருவாடானை பகுதி விவசாயிகள் வரும் டிச.15-ம் தேதிக்குள் அந்தப் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர் காப்பீடு செய்யலாம் எனஅவர் தெரிவித்துள்ளார்.

**முட்டை விலை**

First Published : 05 Dec 2010 12:27:32 PM IST

நாமக்கல், டிச.4: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்தபடி, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.05 சென்னையில் ரூ. 2.40.

கறிக்கோழி விலை

கறிக்கோழி விலை: பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்தபடி, கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 42, முட்டைக் கோழி கிலோ ரூ. 27.

**மானிய விலையில் சிங் சல்பேட் விநியோகம்**

First Published : 05 Dec 2010 01:48:42 PM IST

பெரம்பலூர், டிச. 4: வேப்பூர் வட்டாரத்தில் நெல் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் சிங் சல்பேட் உரம் விநியோகம் செய்யப்படுகிறது என்றார் வேப்பூர் வேளாண்மை உதவி இயக்குநர் சி. அண்ணாதுரை.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேப்பூர் வட்டாரத்தில் சம்பா நெல் நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெல் பயிருக்கு தேவையான பத்து வகை நுண்ணூட்ட உரங்களில், மிகவும் முக்கிய நுண்ணூட்ட உரம் சிங் சல்பேட் ஆகும்.

வேப்பூர் வட்டாரத்திலுள்ள மண் வகையில் இந்த உரமானது மிகவும் குறைந்துள்ளது. சிங் சல்பேட் உரம் பற்றாக்குறை காணப்படும் பயிரின் அடி இலை வெளிர் நிறமாகிவிடும்.

மேலும், பயிரின் வளர்ச்சி குறைந்து, சிவப்பு நிறமாக மாறி, காய்ந்து கதிர் வெளியில் வராமல் நின்றுவிடும். இந்த நுண்ணூட்ட பற்றாக்குறை உள்ள நிலங்களில், ஏக்கருக்கு 500 கிலோ வரை மகசூல் இழப்பு ஏற்படும். இதைத் தடுக்க ஒரு ஏக்கருக்கு 10 கிலோ சிங் சல்பேட் வீதம் 20 கிலோ மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும், இந்த உரத்தை மானிய விலையில் விநியோகம் செய்ய, வேப்பூர் வட்டார விவசாயிகளுக்கு தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ. 85 ஆயிரம் மானியத்தொகையாக பெறப்பட்டுள்ளது.

எனவே, வேப்பூர் வட்டார விவசாயிகள் நெல் பயிருக்கு சிங் சல்பேட் நுண்ணூட்டம் பெற, வேப்பூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

தினமலர்

**தோட்டக்கலை பயிர்கள் சேதம்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:41 IST

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதியில் 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டிருந்த தோட்டக்கலை பயிர்கள் கன மழையால் அழுகி சேதமடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த மங்களூர் ஒன்றியம் சிறுபாக்கம், மங்களூர், மலையனூர், மாங்குளம், அடரி, வெட்டாகுறிச்சி, வினாயகனந்தல், பொயனப்பாடி, பனையாந்தூர், வள்ளிமதுரம் உள்ளிட்ட பல கிராமங்களிலும், நல்லூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வேப்பூர், சேபாக்கம், பூலாம்பாடி, நிராமணி, பா.கொத்தனூர், ஐவதுகுடி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், தங்களின் நிலங்களில் தோட்டக்கலை பயிர்களை பயிரிட்டிருந்தனர்.

மரவள்ளிக் கிழங்கில் குங்குமரோஸ், வெள்ளைரோஸ், பர்மா ஆகிய ரக ஓராண்டு பயிர்கள், கடந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் மூட்டை ஒன்றுக்கு 500 முதல் 700 வரை விற்றது. இதனால், இந்த ஆண்டும் அதே ரக பயிர்களை எப்போதும் இல்லாத வகையில் அதிக அளவில் விவசாயிகள் பயிரிட்டனர். கிழங்கு வளர்ச்சியடைந்து அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில், கடந்த ஒரு வாரமாக கொட்டிய கன மழையால் வெள்ளம் புகுந்து, நிலங்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

ஒரு வாரமாகவே மரவள்ளிக் கிழங்கு பயிரில் தண்ணீர் தேங்கியுள்ளதால், அழுகல் ஏற்பட்டு நாசமாயின. இதேபோல் மருத்துவப் பயிரான கோலியஸ், மஞ்சள், மானாவாரி பயிர்களான மக்காச்சோளம், பருத்தி ஆகிய பயிர்களும் மழையால் நாசமானது. 5,000 ஏக்கர் பரப்பளவில்

மரவள்ளி பயிர்களும், 250 ஏக்கர் மஞ்சள், 125 ஏக்கர் பூக்கள், 175 ஏக்கர் கோலியஸ் உள்ளிட்ட பயிர்கள் கன மழையால் சேதமடைந்தன. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**மணிலா சாகுபடி செய்து பயன்பெற வேளாண் இணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:27 IST

விழுப்புரம் : வட கிழக்கு பருவ மழை காரணமாக மண்ணில் இருக்கும் ஈரத் தன்மையை பயன்படுத்தி மணிலா சாகுபடி செய்து பயன்பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார்.
இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை காரணமாக மண்ணில் இருக்கும் ஈரத் தன்மையை பயன் படுத்தி கார்த்திகை பட்டத்தில் (நவம்பர் - டிசம்பர்) மணிலா சாகுபடி செய்து உயர் விளைச்சல் பெறலாம். டிஎம்வி.7, கோ. 2, கோஜி.என்.4, வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.3, ஏ.எல்.ஆர்.3 மற்றும் வி.ஆர்.ஐ.ஜி.என். 5 ஆகிய உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்து ஏக்கருக்கு 56 கிலோ விதையை பயன்படுத்த வேண்டும்.

விதைக்கும் முன் ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைகோடெர்மா விரிடியை கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். மேலும் ரைசோபியம் (மணிலா) 10 பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா 10 பாக்கெட்டுடன் 25 கிலோ தொழு உரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து விதைக்கும் முன் இடவேண்டும். வரிசை நடவின் மூலம் செடிகளின் வரிசைகளுக்கிடையே 30 செ.மீட்டரும், செடிகளுக்கிடையே 10 செ.மீ., இருக்க வேண்டும். ஏக்கருக்கு 10 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்தை இட வேண்டும். நிலக்கடலைக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர் நிலக் கடலை ரிச் ஏக்கருக்கு 2.20 கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளித்து உயர் விளைச்சல் பெறலாம். இவ்வாறு வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**தொடர் மழையால் பூண்டு ரூ.20 உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,02:56 IST

ஈரோடு: தொடர் மழை எதிரொலியால் பூண்டு விலை கிலோவுக்கு 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.ஈரோடு கொங்கலம்மன் கோவில் பகுதியில் பூண்டு மொத்த வியாபாரக் கடைகள் அதிகளவில் உள்ளன. இங்கிருந்து மாவட்டம் முழுவதும் உள்ள சில்லரை வியாபாரிகள்

அதிகம் வாங்கிச் செல்கின்றனர்.ராஜஸ்தான், மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய வடமாநிலங்கள் மற்றும் ஊட்டி, கொடைக்கானல் ஆகிய பகுதியில் இருந்து நாட்டுப் பூண்டு, மலைப்பூண்டு வரத்தாகிறது. சில மாதங்களுக்கு முன் நாட்டுப்பூண்டு 140 ரூபாய் முதல் 160 ரூபாய வரையும், மலைப்பூண்டு 240 முதல் 260 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

தொடர் மழை எதிரொலியாக பூண்டு வரத்து குறைந்துள்ளது. நாட்டுப் பூண்டு கிலோவுக்கு 20 வரை உயர்ந்து 160 ரூபாய் முதல் 180 வரை விற்கப்படுகிறது. மலைப்பூண்டு விலை அதே விலை நீடிக்கிறது.பூண்டு வியாபாரிகள் கூறியதாவது: தொடர் மழை காரணமாக ஊட்டி, கொடைக்கானல் பகுதியில் இருந்து பூண்டு வரத்து குறைந்து விட்டது. வடமாநிலங்களில் இருந்தும் பூண்டு வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. பூண்டு வரத்து குறைவு காரணமாக கிலோவுக்கு 20 ரூபாய் அதிகரித்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:30 IST

கள்ளக்குறிச்சி : சின்னசேலம் வேளாண்மை துறை சார்பில் ஐசோபாம் எண்ணெய்பனைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.சின்னசேலம் தாலுகா அலுவலகத்தில் நடந்த பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தலைமை தாங்கி, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார்.வேளாண்மை அலுவலர் கோவிந்தன், துணை வேளாண்மை அலுவலர் முத்துகிருஷ்ணன், உதவி வேளாண்மை அலுவலர் தியாகராஜன், காவேரி பாமாயில் நிறுவன களப்பணியாளர் மகேந்திரன் ஆகியோர் எண்ணெய் பனை சாகுபடி முறை, பூச்சு பாதிப்பு, சந்தை நிலவரம் குறித்து பயிற்சி அளித்தனர்.பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் ஆரோக்கியசாமி, ரஜினிகாந்த், துரை, செந்தல், வெங்கடேசன் செய்திருந்தனர்.

**உற்பத்தி குறைந்ததால் அரளி பூ விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,02:11 IST

பனமரத்துப்பட்டி: சாரல் மழை,வெயில் காணாத பருவ நிலை மாற்றத்தால், அரளி பூ உற்பத்தி அடியோடு குறைந்ததால், 100 கிலோ வந்த வயலில் வெறும் அரை கிலோ பூ மட்டும்

கிடைக்கிறது. அய்யப்பன் கோவில் சீசன்,மார்கழி மாதகோவில் விழா முன்னிட்டு ஒரு கிலோ அரளி பூ 250 ரூபாய் வரை  விலை உயர்ந்தும், மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள கம்மாளப்பட்டி,
ஜல்லூத்துப்பட்டி,குரால்நத்தம்,தும்பல்பட்டி,திப்பம்பட்டி,குள்ளம்பட்டி,
அடிக்கரை,காளியாகோவில்புதூர் உள்ளிட்ட பகுதியில் 100 ஹெக்டேர் பரப்பளவில் அரளி பூ பயிரிடப்பட்டுள்ள. சிவப்பு, வெள்ளை,மஞ்சள், ரோஸ்,சாதா உள்ளிட்ட ஐந்து வகையான அரளி உள்ளன.

நாள்தோறும் அதிகாலையில் அரளி அறுவடை செய்யப்பட்டு வேன் மூலம் சேலம்,பெங்களூரு, சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு விற்பனைக்கு செல்கிறது. அரளி பூ பறிக்கும் தொழிலில் 3000 த்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.சில நாட்களாக புயல் மழை பரவலாக பெய்து, குளிர் காற்று வீசுவதால் பகலில் வெயில் இன்றி உள்ளது. அரளி  மொக்கு வளர தேØயான வெயில் இல்லாததால் பூ உற்பத்தி அடியோடு குறைந்தது. உற்பத்தி சரிவால் அரளி பூ விலை கிடு,கிடுவென உயர்ந்துள்ளது. விலை உயர்ந்தும் மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், பயன் இல்லை என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.அடிக்கரை விவசாயி பழனிவேல் கூறியதாவது:கடந்த மாதத்தில் அரளி பூ கிலோ 50 ரூபாய் வரை விலைகிடைத்தது. அய்யப்பன் கோவில் சீசன் துவங்கியதால் பூ விலை உயர துவங்கியது. ஆனால்,  சில நாட்களாக பெய்த தொடர் மழையால் அரளி மொக்கு செடியில் இருந்து கொட்டிவிட்டது. வெயில் இன்றி குளிர் காற்று வீசுவதால் புதிய மொக்குகள் தோன்றால் வெறும் செடி மட்டும் உள்ளது. வழக்கமாக மார்கழி மாத பனியில் பூ உற்பத்தி குறையும். தற்போது மழையால், ஒரு மாதத்திற்கு முன்பாக பூ உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால்,விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

நாள்தோறும் 100 கிலோ உற்பத்தியான வயலில் வெறும் அரை கிலோ மட்டும் கிடைக்கிறது. உற்பத்தி குறைந்ததால் சிவப்பு அரளி கிலோ 250 ரூபாய்க்கும், ரோஸ்,சாதா 230 ரூபாய்க்கும் விலை அதிகரித்துள்ளது.அடுத்து வர இருக்கும் மார்கழி மாதத்தில் கோவில் விழா நடக்கும் சமயத்தில் மேலும் அரளிப்பூ விலை உயர வாய்ப்பு உள்ளது. புயல் மழை, கடும் குளிர், வெயில் இல்லாததால், அரளி செடிகள் பூ இன்றி வெறுமையாக உள்ளது. விலை உயர்ந்து வரும் நிலையில் மழையால் உற்பத்தி இல்லாததால், வருத்தமாக இருக்கிறது. பத்து நாட்களுக்கு வெயில் அடித்தால் மீண்டும் மொக்கு தோன்றி பூ உற்பத்தி துவங்கி விடும் அந்த நேரத்தில் அரளி கிலோ 10 ரூபாய்க்கு வந்துவிடும், என்றார்.

**கொத்தமல்லி சாகுபடியில் கூடுதல் லாபம்: வேளாண் புதுமை திட்ட அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,00:58 IST

கரூர்: கொத்தமல்லி சாகுபடி கூடுதல் லாபம் அளிப்பதாக, தமிழ்நாடு வேளாண் பல்கலை தேசிய வேளாண் புதுமைத் திட்ட உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் அறிவித்துள்ளார். அவர் அறிக்கையில் உள்ளதாவது: தமிழகத்தில் கார்த்திகை பட்டத்துக்கான பயிராக கொத்தமல்லி உள்ளது. நடப்பாண்டு போதுமான அளவு வடகிழக்கு பருவமழை பெய்வதால், முக்கிய பயிர்களை பயிரிட விவசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர். அறுவடை நேரத்தில் இந்த பயிருக்கு நல்ல விலை கிடைப்பது குறித்து அறிந்துக்கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.விவசாயிக்கு உதவும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கும் தேசி ய வேளாண் புதுமை திட்டத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் விலை முன்னறிவிப்பு செய்துள்ளது.கொத்தமல்லி முக்கிய மசாலாப் பொருளாகும். உலகளவில் இப்பயிர்கள் வர்த்தக அளவு 0.85-1 லட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலகசந்தையில் இந்தியா மிகப்பெரிய உற்பத்தியாளராகவும், ஏற்றுமதியாளராகவும் உள்ளது. இந்தியாவில் 2009ல் 3.62 லட்சம் ஹெக்டரில் கொத்தமல்லி பயிரிட்டு, 2.88 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகத்தில் கொத்தமல்லி 24,748 ஹெக்டரில் பயிர் செய்யப்படுகிறது. தூத்துக்குடி, விருதுநகர், கோவை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வின் படி அடுத்த 2011 ஃபிப்ரவரி, மார்ச் அறுவடையின் போது கொத்தமல்லி விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வண்ண மீன்கள் உற்பத்தி குறித்து ஆராய்ச்சி குறுந்தகடு வெளியீடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:39 IST

பரங்கிப்பேட்டை : லட்சத்தீவில் கடல் வண்ண மீன்கள் உற்பத்தி செய்வது குறித்த ஆராய்ச்சி செய்த திட்ட முடிவுக்கான புத்தகம், குறுந்தகடு கேரளாவில் வெளியிடப்பட்டது.பரங்கிப்பேட்டையில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையம் உள்ளது. லட்சத் தீவில் கடல் வண்ண மீன்கள் குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டு அதற்கான திட்ட முடிவு புத்தகமாகவும், குறுந்தகடாகவும் தயார் செய்யப்பட்டது.குறுந்தகடுகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் அஜீத்குமார் தயார் செய்தார். அதற்கான வெளியீட்டு விழா கேரள மாநிலம் கொச்சினில் நடந்தது. குறுந்தகடை மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சக செயலாளர் சைலேஷ் நாயக் வெளியிட்டார். நிகழ்ச்சியில்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சி மைய புல முதல்வர் பாலசுப்ரமணியன் மற்றும் கடல் அறிவியல் விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

**மழையால் 30 ஆயிரம் ஹெக்டேர் பயிர் பாதிப்பு; சுகாதாரத்துறை செயலர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:35 IST

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் கடந்த பத்து நாட்களாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புக்களை பார்வையிட்டு மதிப்பீடு விபரங்களை அரசுக்கு தெரிவிக்க, அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு உயர் அலுவலர் சுகாதாரத்துறை செயலர் சுப்புராஜ், தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நேரில் ஆய்வு மேற்கொண்டார். முன்னதாக, தஞ்சை பயணியர் விடுதியில் அரசுத்துறை அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு நடத்தினார். பின், திருவையாறு தாலுகா கண்டியூர், திருக்காட்டுப்பள்ளி ரோட்டில் மேலத்திருப்பூந்துருத்தி ரோடுகள் மழையால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார். பாபநாசம் தாலுகா வீரமாங்குடி பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள், அழுகிய நெற்பயிர்களை பார்வையிட்டார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி.மணி, கலெக்டர் சண்முகம் மற்றும் அலுவலர்களுடன் பார்வையிட்டு, விவசாயிகளிடம் பாதிப்பு குறித்து அவர் கேட்டறிந்தார். பின், ஒரத்தநாடு தாலுகா திருமங்கலக்கோட்டை கீழையூர் பகுதியில் கண்ணனாறு உடைப்பு பாதிப்பு, பெரியகோட்டை, சொக்கனாவூர் பகுதியில் பாமணி ஆறு, கண்ணனாறு இணையும் இடத்தில் நெல் வயல் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டார்.

பின், அவர் கூறுகையில்,""தஞ்சை மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் 1.20 லட்சம் ஹெக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், 30 ஆயிரம் ஹெக்டேர் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. பத்து நாட்களாக தொடர் மழை, இடி, மின்னலால் பத்துப்பேர் இறந்துள்ளனர். 335 கால்நடைகள் இறந்துள்ளன.""இவற்றில் 216 ஆடுகள், 26 பசு மாடு, 25 எருமை மாடுகள் இறந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகள் முழுமையாக கணக்கிடப்படுகிறது. தொடர்ந்து பெய்து வரும் மழை, வெள்ளத்தை நேரில் பார்வையிட்டு விபரங்களை தெரிவிக்குமாறு, முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டபடி மாவட்டம் முழுவதும் வெள்ளச்சேதம் ஆய்வு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ""வெள்ளச்சேதம் குறித்து சென்னையில் டிசம்பர் ஏழாம் தேதி முதல்வர் கருணாநிதி தலைமையில் நடக்க உள்ள கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. மாவட்டம் முழுவதும் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும்," என்றார்.

**டெல்டா மாவட்டத்தில் பரவலாக மழைப்பதிவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:39 IST

தஞ்சாவூர்: காவிரி டெல்டா மாவட்டமான தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில் நேற்றும் பெரும்பாலான இடங்களில் பலத்த மழையும், பிற இடங்களில் லேசான மழையும் பதிவானது. கடந்த 10 நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை நேற்றும் முழுமையாக நீடித்தது. சில மணித்துளிகள் கூட வெயில் தென்படாத வகையில் காணப்பட்டது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழையளவு (மி.மீ.,ல்): திருப்பூண்டி 45 மி.மீட்டர், வேதாரண்யம் 42, நாகை 39.2, தலைஞாயிறு 32.2, சீர்காழி 27.8, கொள்ளிடம் 26, ஒரத்தநாடு 25.6, திருத்துறைப்பூண்டி 25, பொறையாறு 24.4, முள்ளியாறு 23.2, நன்னிலம் 22.2, வலங்கைமான் 18.2, அணைக்கரை 18, முத்துப்பேடடை 17.6, பாண்டவையாறு 17.4, மஞ்சளாறு 17.3, மயிலாடுதுறை 17.2. நீடாமங்கலம் 17, குடவாசல் 16.4, கும்பகோணம் 15.6, திருவாரூர் 15.2, மன்னார்குடி 15, மணல்மேடு 13.4, பாபநாசம் 12.2, நெய்வாசல்தென்பாதி 11.8, மதுக்கூர் 11, கோரையாறு 10.4, ஈச்சன்விடுதி 10.2, பேராவூரணி 7.6, வெட்டிக்காடு 6.6, பட்டுக்கோட்டை 5.5, திருவையாறு 5, அய்யம்பேட்டை 4 மழை பதிவானது.  தொடர் மழை காரணமாக திருச்சியில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**மழையால் வாழைத்தார் வெட்டும் பணிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,00:54 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகாவில், தொடரும் மழையால் வாழைத்தார் வெட்டும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு  உட்பட்ட லாலாபேட்டை, மகாதானபுரம், பிள்ளாப்பாளையம், வல்லம், கோவகுளம் உள்ளிட்ட பகுதிகளில் 5,000 ஏக்கர் பரப்பளவில் வாழை விவசாயம் நடக்கிறது. தற்போது வாழைதார் முழுவளர்ச்சி அடைந்து விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. முகூர்த்த காலம் என்பதால் தற்போது கூடுலாக விற்பனை  செய்யப்படுவது வழக்கம். தற்போது, பருவமழை தீவிரமடைந்துள்ளதால், வாழைத்தார் வெட்ட முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.  தற்போது விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளதால், சில்லறை விற்பனைக்கு கூட வழியின்றி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**ஆடுதுறையில் எண்ணெய் பனை குறித்து வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,01:36 IST

கும்பகோணம்: ஆடுதுறை தமி ழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த வேளாண்மை துறை அலுவலர்களுக்கு, "எண்ணெய்ப்பனை ஒரு எதிர்கால பயிர்,' என்ற பயிற்சி நடந்தது. கும்பகோணம் அருகே ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எண்ணெய் பனை சாகுபடி பற்றி தமிழக அரசு வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கான இரண்டு நா ள் பயிற்சி முகாம் துவங்கியுள்ள து. திருச்சி, கரூர், கடலூர், திருநெல்வேலி, வேலூர், தேனி ஆ கிய மாவட்ட அலுவலர்களுக்காக மாவட்டம் ஒன்றுக்கு இரண் டு நாள் வீதம் பயிற்சி நடந்தது. இதன் துவக்க விழாவுக்கு தஞ்சை இணை வேளாண்மை இயக்குனர்  லோகநாதன் தலைமை வகித்தார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது: இந்திய அளவில் எண்ணெய்ப்பனை சாகுபடிக்கு ஏற்ற வாய்ப்பாக எட்டு லட்சம் ஹெக்டேர் நிலமும்ல தமிழகத்தில் 30 ஆயிரம் ஹெக்டேர் நிலமும் உள்ளது.

சமையல் எண்ணெய்யாக மட்டுமில்லாமல் மற்ற மதிப்பூட்டப்பட்ட அழகு சாதன பொ ருட்களாகவும் பாமாயில் பயன்படுகிறது. எண்ணெய்ப்பனை சாகுபடியில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வருவாய் வரும் வகையில் தகுந்த ஊடுபயிர்களை பயிரிடலாம். சொட்டு நீர் பாசனம் மற்றும் உர மேலாண்மையையு ம் செய்வதற்கு அரசின் உதவி திட்டங்கள் உள்ளது. வேளாண் பெருமக்கள் இதனை நல்ல வØ கயில் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த பயிருக்கு ஒப்பந்த பண்ணை ஏற்பாடுகள், திருட்டு பயமின்மை, பூச்சி நோய் தாக்காமை போன்ற நன்மைகளும் இருப்பதால் எதிர்காலத்தில் இன்னும் அரசின் திட்டங்களுடன் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தேவையான தொழில் நுட்பங்களை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி திட்டங்கள் மூலம் கண்டுபிடித்துள்ளது என்றார்.

**நெல்லுக்கு சமச்சீர் உணவு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2010,02:04 IST

மதுரை : "மதுரைநீர் மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் காதிரி கூறியதாவது :நெற்பயிருக்கு தழை, மணி, சாம்பல் சத்துகளுடன், துத்தநாக சத்தும் அவசியம். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து அளிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக யூரியாவை பயன்படுத்தினால், பாசன நீரில் கரைந்தும், ஆவியாகியும் வீணாகும். மேல் உரமாக மூன்று அல்லது நான்கு முறையாக பிரித்து யூரியா

உரமிட்டால், சத்துகள் பயிருக்கு முழுமையாக கிடைக்கும். ஒருமுறை இடும் போது அதிகபட்சமாக 22 கிலோவுக்கு மேல் தேவையில்லை, என்றார்.

**மாறி வரும் உணவு முறைகளால் சிறுதானிய சாகுபடி அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,23:21 IST

தேனி : மக்களிடம் மாறி வரும் உணவு வகைகளால் சிறுதானிய சாகுபடி அதிகரித்து வருகிறது. விவசாயிகளும் மாற்றுபயிராகவும், மானாவாரியாகவும் சிறுதானிய சாகுபடியை ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். மக்களிடையே முக்கிய உணவாக அரிசி மாறியதில் இருந்தே சிறுதானிய உற்பத்தி பெருமளவில் சரிந்துவிட்டது. மிக குறைவான இடங்களில் விளையும் சிறுதானியங்களும் கோழி உணவு, மாட்டுத்தீவனங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் சர்க்கரை நோய், இருதய நோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது. டாக்டர்களும் அரிசி உணவினை குறைத்துக் கொண்டு சிறுதானிய உணவுகளை சேர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கி வருகின்றனர். இதனால் சிறுதானியங்களின் விற்பனை சமீப காலமாக அதிகரித்துள்ளது. அரிசி விலைக்கு இணையாக சிறுதானியங்களுக்கு நல்ல விலையும் கிடைத்து வருகிறது. தற்போதைய நிலையில் வரகு, சாமை, தினை, குதிரைவல்லி போன்றவற்றின் விலை கிலோவிற்கு 20 ரூபாய்க்கு மேல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

சோளம், மக்காச்சோளத்திற்கும் நல்ல விலை கிடைத்து வருகிறது. மழையும், மண் வளமும் குறைந்து விட்ட நிலையில், நெல் விளைச்சலுக்கு அதிக செலவாகிறது. ஆனால் சிறுதானிய சாகுபடிக்கு செலவு குறைவு. நோய் தாக்குதல் இல்லாததாலும், குறைந்த மழை கிடைத்தாலும், குறைந்த மண் வளத்திலும் சிறுதானியங்கள் வளர்கிறது. சாகுபடியின் போது இதற்கான பராமரிப்பு செலவுகளும் குறைவு. எனவே தற்போது பல விவசாயிகள் மீண்டும் சிறுதானிய சாகுபடிக்கு மாறி வருகின்றனர். செயல்விளக்க திடல்கள் அமைத்து விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளும் வழங்கி, சிறு தானிய சாகுபடி செய்ய வேளாண்மைத்துறை விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது.

**யூரியாவின் பயன்பாட்டை குறைக்கும் கொழிஞ்சி பசுந்தாள் உரம்: விவசாயக் கல்லூரியில் விற்பனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:47 IST

மதுரை : ""யூரியாவின் பயன்பாட்டை குறைக்கும், கொழிஞ்சி பசுந்தாள் உரத்தின் விதைகள், விவசாயக் கல்லூரியில் விற்கப்படுகிறது," என, மதுரை விவசாயக் கல்லூரி முதல்வர், பயிர் இனப்பெருக்கத் துறைத் தலைவர் இப்ராஹிம் தெரிவித்தனர்.

அவர்கள் கூறியதாவது : சணப்பூ, தக்கைப்பூண்டு வகை பசுந்தாள் உரங்களை விட, புதிய கொழிஞ்சி ரகம் சிறப்பாக உள்ளது. தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும், அனைத்து மண் வகைக்கும் ஏற்றது. எக்டேருக்கு 15 - 20 கிலோ விதை தேவைப்படும். களை நிர்வாகம், உரம் தேவையில்லை. நேரடியாக விதைக்கலாம். பூச்சிகள் அதிகம்
தாக்காது. வறட்சியை தாங்கி வளரக்கூடியது. 30 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சலாம். 65 முதல் 70 நாட்கள் வளர்ந்த பசுந்தாள் உரங்களை அப்படியே மடக்கி உழவு செய்ய வேண்டும்.பத்து நாட்கள் கழித்த பின்,
விருப்பப்பட்ட பயிரின் விதை நடலாம். பயிர்களில் யூரியாவின் பயன்பாட்டை பெருமளவு குறைத்து விடும். மூன்று மூட்டை யூரியா தரும் சத்தை, பசுந்தாள் உரம் தருகிறது. மண் வளத்தை பாதுகாக்கிறது. மேலும் மண்ணில் குறைந்த நாட்களில் மட்கி விடும். மற்ற பசுந்தாள் உரங்கள் மட்க, நீண்ட நாட்களாகும். ஒரு முறை விதைத்தால்,
மீண்டும் தானாக முளைத்து வளரும். விவசாயிகளுக்கு ஏற்ற உரம் இது, என்றனர்.பசுந்தாள் உர விதைகளுக்கு, மதுரை விவசாயக் கல்லூரியை அணுகலாம்.

## 100 ஏக்கரில் கரும்பு மழையால் பாதிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:34 IST

கும்பகோணம்: தொடர் மழை காரணமாக நூறுக்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட கரும்புகள் சாய்ந்து சேதமடைந்துள்ளன. கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் மழை நீர் சாலைகளில் தேங்கி ஓட முடியாமல் நிற்கிறது. அத்துடன் வயல்வெளிகளில் மழை நீர் சூழ்ந்து தண்ணீர் வடியாமல் உள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மழை காரணமாக சுவாமிமலை, நாச்சியார்கோவிலில் மற்றும் திருப்பனந்தாள் பகுதிகளில் நூறுக்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட கரும்புகள் அடியோடு சாய்ந்து சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மழை நீர் வடிந்தால்தான் அந்த கரும்புகளை அப்புறப்படுத்த முடியும் என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர். பாதிக்கப்பட்ட கரும்புகளுக்கு அரசு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும் என கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தஞ்சையில் 28,000 ஹெக்டேர் நெற்பயிர் மூழ்கியது : வருவாய்த்துறை அமைச்சர் ஆய்வுக்குப்பின் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:33 IST

தஞ்சாவூர்: ""தஞ்சை மாவட்டத்தில் 28 ஆயிரம் ஹெக்டர் சம்பா நெற்பயிர் மழை நீரில் மூழ்கியுள்ளது," என்று வருவாய்துறை அமைச்சர் பெரியசாமி தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமி மற்றும் மத்திய நிதித்துறை இணையமைச்சர் பழநிமாணிக்கம் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நேற்று காலை தஞ்சாவூர் அரசினர் விருந்தினர் மாளிகையில் வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமி தலைமையில் அரசு அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் பழநிமாணிக்கம், மாநில வணிகவரித்துறை அமைச்சர் உபயதுல்லா, கலெக்டர் சண்முகம் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

தொடர்ந்து தஞ்சை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளான ஒரத்தநாடு அருகே பூவத்தூர், திருமங்கலக்கோட்டை தொண்டராம்பட்டு சாலை முக்கரை கிராமத்தில் தட்டான் வாய்க்கால் நிரம்பி மழை நீர் தேங்கியுள்ள வயல்கள், திருமங்கலக்கோட்டை கீழையூர் பகுதியில் கண்ணணாறு நிரம்பி பாதிக்கப்பட்ட பகுதிகள், பெரியக்கோட்டை, சொக்கனாவூர் சாலையில் ஓர் அடிக்கு மேல் செல்லும் மழை நீர், பாமணி, கண்ணணாறு இணையும் இடத்தில் பாதிக்கப்பட்டுள்ள நெல் வயல்கள் ஆகியவற்றை அமைச்சர் குழுவினர் பார்வையிட்டனர்.

**அப்போது வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமி கூறியதாவது**: காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை வெள்ள பாதிப்புகளை இரண்டு நாட்களாக பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். மாவட்ட நிர்வாகம் சார்பில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் போர்க்கால அடிப்படையில் பாதிக்கப்படுபவருக்கு நிவாரண உதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனர்.மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் பயிர்கள் மற்றும் கால்நடை விபரம் முழுமையாக கணக்கெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நடவு செய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து ஐந்தாயிரம் ஹெக்டேரில் 28 ஆயிரம் ஹெக்டேர் நெற்பயிர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மூழ்கிய நிலையில் உள்ளது.

இதேபோல் கடலூர் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஹெக்டேரும், திருவாரூர் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஹெக்டேரும், நாகை மாவட்டத்தில் 50 ஆயிரம் ஹெக்டேரும் மழை நீரில் மூழ்கியுள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் தேவையான தடுப்பு மற்றும் நிவாரணப்பணிகள் மேற்கொள்ளவும், பாதிப்பு விபரங்களை கணக்கெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமி தெரிவித்தார். எம்.எல்.ஏ.,க்கள் துரை சந்திரசேகரன், மகேஷ் கிருஷ்ணசாமி, டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், வேளாண் துறை இணை இயக்குனர் லோகநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் தனசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்

**உர வியாபாரிகளுக்காக 1,200 டன் யூரியா வருகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:34 IST

கும்பகோணம்: டெல்டா மாவட்ட தனியார் உர வியாபாரிகளுக்காக 1,200 டன் யூரியா உரம் தூத்துகுடியிலிருந்து கும்பகோணத்துக்கு நேற்று ரயில் மூலம் வந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி தற்போது எட்டு லட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு தேவையான உரங்களான யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி., 20:20 காம்ப்ளக்ஸ் ஆகியவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு தட்டுப்பாடு இல்லாமல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள 250க்கும் மேற்பட்ட தனியார் உர விற்பனையாளர்களுக்கு நேற்று தூத்துகுடி ஸ்பிக் தனியார் உர நிறுவனத்திலிருந்து 21 ரயில் வேகன்களில் 1,200 டன் யூரியா மற்றும் 150 டன் 20:20 காம்ப்ளக்ஸ் உரம் வந்தது. கும்பகோணம் வரவழைக்கப்பட்ட உர மூட்டைகளை நூற்றுக்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள் மழை விட்டு விட்டு பெய்யும் நேரத்தை பயன்படுத்தி கொண்டு 80 லாரிகளில் ஏற்று தனியார் வியாபாரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

**மானிய விலையில் தென்னங்கன்றுகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:49 IST

கடலூர்:நெட்டைரக தென்னங்கன்றுகள் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.கடலூர் வேளாண்மை உதவி இயக்குனர் இளவரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தேசிய வேளாண் திட்டத்தின் கீழ் கடலூர் வட்டாரத்தில் நெட்டைரக தென்னங்கன்றுகள் 50 சதவீத மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.

தென்னங்கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் கடலூர், தூக்கணாம்பாக்கம் மற்றும் கீழ்குமாரமங்கலம் வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கத்தரிக்காய் விலை "கிடுகிடு' உயர்வு:கிலோ ரூ.45**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,23:27 IST

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதியில் பெய்த மழை காரணமாக கத்தரிக்காய் செடியில் புழுத்தாக்குதல் அதிகரித்து, உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், ஒரு கிலோ கத்தரிக்காய் 45 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.
கிணத்துக்கடவு பகுதியில் தண்ணீர் பாசனம் உள்ள விவசாயிகள் 50 எக்டர் நிலப்பரப்பில் கத்தரிக்காய் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மூன்று வாரங்களாக புயல் மழை தொடர்ந்து பெய்ததால், கத்தரிக்காயில் புழுத்தாக்குதல் ஏற்பட்டுள்ளது. மழையால், கத்தரிக்காய் செடியில் இருந்து பூக்கள் உதிர்ந்தவண்ணம் உள்ளது. இதனால், செடியில் காய்ப்புத்திறன் குறைந்துள்ளது. இதில் இருந்து பறிக்கப்படும் காய்களில் புழுத்தாக்குதல் உள்ளதால், அதிகளவில் பறித்த பின் கழிக்கப்படுகிறது. இதை விவசாயிகள் கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தனர். அங்கு நடந்த ஏலத்தில் 15 கிலோ எடையுள்ள கத்தரிக்காய் 600 ரூபாய்க்கு விலைக்கு சென்றது. இந்த விலைக்கு எடுத்து செல்லும் வியாபாரிகள் வெளிமார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு 45 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். இதனால், கத்திரிக்காய் விலை உயர்ந்தும் விவசாயிகளுக்கு பயனில்லை. காரணம் மழையால் கத்தரிக்காயில் புழுத்தாக்கியுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால், கத்தரிக்காய் முழுவதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு விதை சான்று துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,23:53 IST

உடுமலை: உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பருவமழை போதிய அளவு பெய்துள்ளதால் விவசாயிகள் சின்ன வெங்காய சாகுபடியில் ஈடுபட ஆர்வம் காட்டி வருகின்றனர். பி.ஏ.பி., மற்றும் அமராவதி பாசனத்துக்கும், கிணற்று பாசனத்துக்கும் சின்ன வெங்காயம் பயிரிடப்பட உள்ளது. சாகுபடியில் பிரச்னைகள் ஏற்படாமல் இருக்க, விதை தேர்வில் கவனம் செலுத்த விதை சான்று தெரிவித்துள்ளது.விதை ஆய்வு துறை துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் அறிக்கை: நடப்பு பருவத்தில் சின்ன வெங்காய சாகுபடி பரப்பு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. விதைகளை வாங்கி நாற்றங்கால் விட்டு, நாற்றுகள் பயிர் செய்யப்பட உள்ளன. விதை வாங்கும்போது பையில் விபர அட்டை, விற்பனை பட்டியல், விற்பனையாளர் கையொப்பத்தை சரிபார்க்க

வேண்டும்.விதை சான்று துறை உரிமம் பெற்ற விற்பனையாளரிடம் விதைகளை வாங்குவதுடன், மொத்த விதை பாக்கெட்டை உடைத்தோ அல்லது பாக்கெட் இல்லாமல் சில்லரையாகவோ வாங்கக்கூடாது. விபர அட்டையில், வரிசை எண், விதை பெயர், ரகம், முளைப்பு திறன், இனத்தூய்மை, குவியல் எண், காலாவதி நாள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகள் நல்ல விதைகளை வாங்கி, நடவு செய்வதன் மூலம் அதிக விளைச்சல் பெறலாம். சின்ன வெங்காய உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் விதை சட்டத்துக்கு உட்பட்டு விற்பனை மேற்கொள்ள வேண்டும். விற்பனையாளர்கள், விதை வாங்கியதற்கான "இன்வாய்ஸ்' வைத்திருக்க வேண்டும்.

இருப்பு பதிவேடு பராமரித்து சில்லறை விற்பனை மேற்கொள்ளக்கூடாது. முளைப்பு திறன் பாதிக்காதவாறு விதையை சேமித்து வைக்க வேண்டும். பூச்சி, நோய் மருந்து மற்றும் களைகொல்லிகளை விதைகளுக்கு அருகில் வைக்கக்கூடாது. விதை இருப்பு பதிவேட்டுடன் ஒத்திருக்க வேண்டும். விற்பனை நிலையம் முன் இருப்பு பலகை வைத்து, அன்றாட இருப்பை கட்டாயம் குறித்து வைக்க வேண்டும். இந்நடைமுறைகளை பின்பற்றாத விற்பனையாளர்கள் மீது, விதை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும், என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**நெல் பயிர்கள் மூழ்கின விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,23:10 IST

சிங்கம்புணரி : தொடர் மழையால் சிங்கம்புணரியில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின. இங்கு 10 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். சில இடங்களில் அறுவடைக்கு தயார் நிலையிலும், பல கிராமங்களில் பெரும் பயிராகவும், கதிர் பிடித்தும் உள்ளன. தொடர் மழையால் மணிமுத்தாறு, பாலாற்றில் வரத்து அதிகரித்துள்ளது. கிருங்காக்கோட்டை, வயாபுரிப்பட்டி, வடவன்பட்டி, எஸ்.கோயில்பட்டி, கல்லம்பட்டி, அரளிப்பட்டியில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. நீரை வெளியேற்றும் பணியில் விசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மழை நீடித்தால் பயிர்கள் அழுகி மகசூல் பாதிக்கப்படும். பிரான்மலை, மேலப்பட்டி, ஒடுவன்பட்டி மலை அடிவாரத்தில் கடலைப்பயிர்கள் முழுவதும் அழுகிவிட்டன. விவசாயிகளுக்கு உரிய நிவரணம் வழங்க வேண்டும்.

**பிளாஸ்டிக் கழிவுகளால் பயிர்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:22 IST

ஓசூர்: ஓசூர் அருகே விவசாய நிலங்களையொட்டி தனியார் தொழிற்சாலைகளின் பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதால், விவசாய பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு மர்ம நோய் பரவுகிறது.

ஓசூர் சிப்காட் தொழிற்பேட்டையில் 50க்கும் மேற்பட்ட பிளாஸ்டிக், ரப்பர் பொருட்கள் தயாரிக்கும் சிறு, பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு பஸ் சீட் கவர், பைக் சீட் கவர், பிளாஸ்டிக் பைகள், வீட்டு உபயோக ரப்பர் மற்றும்பிளாஸ்டிக், பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு வகை பொருட்கள் தயாரித்து, உள்ளூர் கனரக வாகனங்கள், இரு சக்கர வாகனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் விற்பனை செய்கின்றனர். இங்கு தினம் பல நூறு டன் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் வெளியாகிறது. இவற்றை தொழிற்சாலைகள் பாதுகாப்பான முறையில் பராமரித்து, வேறு பொருட்கள் உற்பத்தி செய்ய வேண்டும் அல்லது அழிக்க வேண்டும். தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்தி தளத்தில் இருந்து வெளியாகும் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை ஓசூர் பகுதியில் ஆங்காங்கே நள்ளிரவில் சாலையோரத்தில் போட்டு செல்கின்றனர். சிலர் சாலையோரங்களில் போட்டு பெட்ரோல் வைத்து தீயிட்டு செல்கின்றனர். குறிப்பாக ஓசூர் அடுத்த சானமாவு, உத்தனப்பள்ளி பகுதியில் ஓசூரில் உள்ள பெரும்பாலான தொழிற்சாலைகளின் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை கொட்டுவதாக புகார் எழுந்துள்ளது.

இந்த கழிவுகளை நள்ளிரவில் வாகனங்களில் கொண்டு வந்து கொட்டும் அவர்கள், தீ வைத்து எரித்து செல்கின்றனர். இதனால், கழிவுகளில் இருந்து வெளியாகும் நச்சு கலந்து நெடி வாயு விவசாய பயிர்களில் பரவி அவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. குடியிருப்புகளிலும் நச்சு புகை பரவுவதால், குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கு மூச்சு திணறல் ஏற்படுகிறது. சானமாவு, உத்தனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு பல்வேறு மர்ம நோய்கள் பரவுகிறது. பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் கழிவுகள் மக்காத வகை கழிவு வகையை சார்ந்தவை. இவற்றை திறந்த வெளியில் தொழிற்சாலைகள் கொட்டவும் கூடாது, எரிக்கவும் கூடாது. நிலத்தில் மக்காத கழிவுகள் போட்டால், நிலத்தின் மண் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இது குறித்து விவசாயிகள் பல முறை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தொழிற்சாலைகள் தொடர்ந்து, பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் கழிவுகளை சாலையோரம் உள்ள விவசாயநிலங்களையொட்டி கொட்டி எரிக்கின்றனர்.

**இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது**: பிளாஸ்டிக், ரப்பர் கழிவுகளை எரிப்பதால் வெளியாகும் துர்நாற்றத்தால் வீடுகளில் இருக்க முடியவில்லை. விவசாய பயிர் செடிகளில் தீ பொறிகள் பட்டும், புகை படர்ந்தும் நாசமடைந்து வருகிறது. இதனால், சாகுபடியில் மகசூல் குறைவாக கிடைக்கிறது. சம்பந்தப்பட்ட தனியார் தொழிற்சாலைகள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

முட்டை விலை இனி குறைப்பதில்லை மண்டல சேர்மன் அறிவிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2010,02:48 IST

நாமக்கல்: "தொடர் மழையால் முட்டை அட்டை தயாரிப்பு பணி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் முட்டை தேக்கமடைந்துள்ளதால், அதன் விலை 205 காசுகளாக குறைக்கப்பட்டுள்ளது. இது குறைந்தபட்ச விலை என்பதால், இனி முட்டை விலை குறைப்பதில்லை' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல சேர்மன் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் முட்டை விலை நிர்ணய ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மண்டல அலுவலகத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ஐயப்பன் கோவில் சீஸன் காரணமாக தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை பாதிக்கப்பட்டது. அதனால் ஹைதராபாத், விஜயவாடா, பெங்களூரு, மைசூர் மற்றும் சென்னை உள்ளிட்ட நகரங்களில் முட்டை நுகர்வு குறைந்துள்ளது.

மேலும், ஏற்றுமதி அளவு குறைந்துள்ளதுடன், தொடர் மழை காரணமாக முட்டை அட்டை தயாரிக்கும் பணி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் தேவைக்கேற்ப முட்டை அட்டை கிடைக்காமல் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. வடமாநிலங்களில் குளிர் ஏற்பட்டுள்ள போதிலும், முட்டை தேவையை பூர்த்தி செய்யமுடியாமல் தேக்கமடைந்துள்ளது. அதனால் நாமக்கல் மண்டல முட்டை விலையை குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி முட்டை விலை படிப்படியாக குறைத்து 205 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது குறைந்தபட்ச விலை என்பதால், இதற்கு கீழ் முட்டை விலையை குறைப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது. மேலும், கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கி வருவதால் கேக் தயாரிப்பதற்காக தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டைக்கான தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் இனிவரும் நாட்களில் முட்டை விலை உயர வாய்ப்புள்ளது.

## தமிழக அரசு, மாநிலம் முழுவதும் வேளாண் பணி மையம் தொடங்க ரூ.400 கோடி நிதி ஒதுக்க திட்டம் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தகவல்

*கோவை, டிச.6–*

*தமிழக அரசு, மாநிலம் முழுவதும் வேளாண் பணி மையம் தொடங்க ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டு உள்ளது என்று கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கூறினார்.*

*பயிற்சி முகாம்*

*கோவை வேளாண் பல்கலைக்கழகம், தமிழக அரசின் கூட்டுறவு துறை சார்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பணியாற்றும் அக்ரி கிளினிக் ஆலோசகர்களுக்கான 3 நாள் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.*

*இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக அரசு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கே.சி.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*மண்–நீர் பரிசோதனை*

*அக்ரி கிளினிக்குகளில் பணியாற்றும் ஆலோசகர்களின் பணி இன்றியமையாதது ஆகும். தமிழக அரசு மாநிலம் முழுவதும் அக்ரி கிளினிக்குகளை தொடங்க ரூ.15 கோடி நிதி ஒதுக்கி உள்ளது. இந்த அக்ரி கிளினிக்குகள் மண் மற்றும் நீர்ப் பரிசோதனை பணிகளை மேற்கொண்டாலும், அவை இன்னும் முறையான அளவில் விவசாயிகளுக்கு சென்று அடையவில்லை.*

*தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பல்வேறு தொழில்நுட்பங்களை வெளியிட்டு இருந்தாலும் அவற்றை கடைப்பிடிக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. குறிப்பாக 'ராஜராஜன்–1000' என்ற நெல் சாகுபடி முறையை சுமார் 10 சதவீத விவசாயிகளே மேற்கொண்டு வருகின்றனர். எனவே இது போன்ற நவீன வேளாண்நுட்பங்களை விவசாயிகளிடம் அதிக அளவில் கொண்டு செல்ல அக்ரி கிளினிக்குகள் செயல்பட வேண்டும்.*

பண்ணை இயந்திர கருவி

அக்ரி கிளினிக்குகளில் பணியாற்றும் ஆலோசகர்கள் நாள்தோறும் விவசாயிகளை சந்தித்து உரம் மற்றும் பயன்பாடு குறித்த அறிவுரைகளை வழங்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் 2 ஆயிரம் வேளாண் பணி மையங்களை தொடங்க மாநில அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதற்காக ரூ.400 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிட்டு உள்ளது. இந்த பணி மையம் வாயிலாக விவசாயிகளுக்கு பண்ணை இயந்திர கருவிகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் இந்துமதி, வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் பா.கலைச்செல்வன், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் வி.சுரேஷ், பயிற்சி பிரிவு பேராசிரியர் விஜயராகவன், சந்தை விரிவாக்க துறை பேராசிரியர் ராமநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேவைப்பாடு உயர்ந்து வருவதால் ரப்பருக்கு பற்றாக்குறை ஐந்து மடங்கு அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

உள்நாட்டில் தேவைப்பாடு உயர்ந்து வருவதால், அடுத்த 10 ஆண்டுகளில் இயற்கை ரப்பருக்கு பற்றாக்குறை ஐந்து மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து அதிகரிக்கும்

வரும் 2011–ஆம் ஆண்டில், ரப்பருக்கு பற்றாக்குறை 1.75 லட்சம் டன்னாகவும், அடுத்த

ஐந்து ஆண்டுகளில் 6.87 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என அனைத்திந்திய ரப்பர் தொழிற்சாலைகள் சங்கத்தின் பிரசிடெண்ட் வினோத் சைமன் தெரிவித்தார். 2020–ஆம் ஆண்டில் தட்டுப்பாடு மேலும் அதிகரித்து 8.40 லட்சம் டன்னாக உயரும் என அவர் மேலும் கூறினார்.

ரப்பர் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், உற்பத்தி குறைந்து வருகிறது. ரப்பர் பயன்பாட்டில், உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. தற்போது ஆண்டுக்கு 9.30 லட்சம் டன் ரப்பர் பயன்படுத்தப்படுகிறது. இது, அடுத்த 10 ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகரித்து 18.90 லட்சம் டன்னாக உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் அதிவேக வளர்ச்சியே ரப்பர் பயன்பாடு அதிகரித்து வருவதற்கு, காரணமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அடிப்படையில் ஆசியாவின் மூன்றாவது மிகப் பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது. பொருளாதார வளர்ச்சி வேகத்தில் உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.

கார்கள் விற்பனை

இந்திய பொருளாதாரம் தற்சார்புடையது. படித்த இளைஞர்கள் அதிகமாக உள்ளனர். இதனையடுத்து, அடுத்த 10 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் சீனாவை இந்தியா விஞ்சிவிடும் என்று நியூயார்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நூரியல் ரூபினி தெரிவித்தார்.

மருத்துவத் துறையில் ரப்பர் பயன்பாடு மிகவும் அதிகரித்து வருகிறது என ஜியோஜித் காம்டிரேடு பங்கு வர்த்தக தரகு நிறுவனத்தின் தலைமை ஆய்வாளர் ஆனந்த் ஜேம்ஸ் தெரிவித்தார்.

இந்நிலையில், நம் நாட்டில் கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் விற்பனை வரலாறு காணாத அளவில் அதிகரித்து வருகிறது. தொழில் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்டு வரும் விறுவிறுப்பால் வர்த்தக வாகனங்கள் விற்பனையிலும் எழுச்சி ஏற்பட்டு வருகிறது. இதனால், டயர்கள் விற்பனை பன்மடங்கு அதிகரிக்கும். டயர்கள் தயாரிப்பில், இயற்கை ரப்பர் முக்கிய மூலப்பொருளாக உள்ளது.

நாட்டில் ரப்பர் பயன்பாடு அடுத்த சில ஆண்டுகளில் விண்ணைத் தொடும் அளவிற்கு உயரும் என்று வர்த்தகத் துறை செயலாளர் ராகுல் குல்லார் தெரிவித்தார்.

உற்பத்தி

ரப்பர் உற்பத்தியில், உலக அளவில் நான்காவது இடத்தில் உள்ள நம் நாட்டில், இதன்

உற்பத்தி சரிவடைந்து வருகிறது. சென்ற நவம்பர் மாதத்தில், ரப்பர் உற்பத்தி 88,500 டன்னாக குறைந்துள்ளது. இது, மதிப்பீட்டைக் காட்டிலும் 15 சதவீதம் (1.04 லட்சம் டன்) குறைவாகும். சென்ற ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது இது 5 சதவீதம் (93,500 டன்) குறைவாக உள்ளது.

மதிப்பீடு

நடப்பு நிதி ஆண்டில், உள்நாட்டில் 8.50 லட்சம் டன் இயற்கை ரப்பர் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 4.8 சதவீதம் குறைவாக இருக்கும் என ரப்பர் வாரியத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

ஆக, தேவைப்பாடு அதிகரித்து வரும் நிலையில், ரப்பர் உற்பத்தி குறைவாக உள்ளது. எனவே, குறைந்த தீர்வையில் ஒரு லட்சம் டன் வரை இயற்கை ரப்பர் இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று குல்லார் மேலும் தெரிவித்தார்.

நடப்பு நிதி ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், ரப்பர் இறக்குமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 3 சதவீதம் (1,39,321 டன்) அதிகரித்து 1,43,468 டன்னாக உயர்ந்துள்ளது.

விலை உயர்கிறது

ரப்பர் பயன்பாடு அதிகரித்து வருவதையடுத்து, சர்வதேச சந்தைகளில் விலை உயர்ந்து வருகிறது. டோக்கியோ முன்பேர வர்த்தக சந்தையில், நவம்பர் 11–ந் தேதி அன்று, ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை, கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்தியாவிலும், கேரளாவில், நடப்புச் சந்தையில் முதல் முறையாக ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.200–ஐ தாண்டி உள்ளது.

## இனிப்பு வகைகளை பரிசளிப்பது அதிகரிப்பு உணவுப் பொருள்கள் தயாரிப்பு நிறுவனங்களின் விற்பனை அமோகம்

சாகர் மால்வியா – ரிட்டாங்கர் முகர்ஜி

மும்பை / கொல்கத்தா

நம் நாட்டில் பண்டிகை, திருமணம் மற்றும் விஷேச நாள்களில் ஒருவருக்கொருவர் பரிசுப் பொருள்கள் அளிப்பது வழக்கம். பொதுவாக, நகைகள், ஆயத்த ஆடைகள் உள்பட பல வகையான பொருள்களை வழங்கி மகிழ்ச்சியை பரிமாறிக் கொள்வார்கள்.

இனிப்பு – சிப்ஸ்

தற்போது, சாக்லெட், இனிப்பு வகைகள், உலர் பழங்கள், பழரச பானங்கள், சிப்ஸ்

வகைகளை பரிசாக அளிப்பது அதிகரித்து வருகிறது. இதனால் இந்த வகைப் பொருள்களின் விற்பனை அதிகரித்து வருவதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, உணவுப் பொருள்களை பரிசாகவும், தனிநபர் உபயோகத்திற்காகவும் பயன்படுத்தும் அளவு இரண்டு மடங்கு அதிகரித்து உள்ளது. இனிவரும் காலங்களில், சாக்லெட் மற்றும் இனிப்பு வகைகள், பழரச பானங்கள், சிப்ஸ் வகைகள் விற்பனையில் போட்டிகள் கடுமையாக இருக்கும், என நீல்சன் நிறுவனத்தின் இயக்குனர் ரூஸ்வெல்ட் டீ சவுசா தெரிவித்தார்.

பழரச பானங்கள்

பெப்சி, தாபர், காட்பரி போன்ற நிறுவனங்களின் ஆண்டு விற்பனையில், பண்டிகை காலத்தின் பங்களிப்பு 40 சதவீதமாக உள்ளது. சென்ற 2009–ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில், பண்டிகை காலத்தில் சாக்லெட் விற்பனை 8 சதவீதம் உயர்ந்து இருந்தது. இதற்கு முந்தைய மூன்று காலாண்டுகளில் இது 4 சதவீதமாக இருந்தது.

இவ்வாண்டு பண்டிகை காலத்தில், பழரச பானங்கள் தொடர்பான ‘கிஃப்ட்’ பாக்கெட்டுகள் விற்பனை கடந்த ஆண்டை விட 40 சதவீதம் அதிகமாக இருந்தது என தாபர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது. சென்ற தீபாவளியின் போது, இந்த விற்பனை 40 சதவீதம் அதிகமாக இருந்தது என சில்லரை விற்பனை நிறுவனங்களான பியூச்சர் குழுமம், ஸ்பென்சர்ஸ் ரீடெயில் மற்றும் ஆதித்யா பிர்லா ஆகிய நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பியூச்சர் குழுமத்தின் வர்த்தக தலைவர் (தனிப்பட்ட பிராண்டு) தேவேந்திரா சாவ்லா கூறும்போது, “நிறுவனத்தின் தனிப்பட்ட பிராண்டுகளான டேஸ்டி டிரீட், பாலாடைக் கட்டிகள், மாம்பழ பானம் ஆகியவற்றின் விற்பனை மேலும் அதிகரிக்கும் என எதிர்பாக்கப்படுகிறது” என்று தெரிவித்தார்.

கிறிஸ்துமஸ்

எதிர்வரும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகைகளின் போது, சாக்லெட், இனிப்பு வகைகள், பழரச பான பாக்கெட்டுகள் விற்பனை பன்மடங்கு உயரும் என சில்லரை விற்பனை நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. தற்போது, பண்டிகை காலங்களில் கார்ப்பரேட் நிறுவனங்கள், தங்களின் ஊழியர்களுக்கு இனிப்பு பண்டங்கள் மற்றும் சாக்லெட் வகைகள் அடங்கிய பாக்கெட்டுகளை பரிசாக வழங்கி வருகின்றன. இதன் காரணமாக, ஆண்டின் இறுதிக்குள் இந்த வகையான பாக்கெட்டுகளின் விற்பனை மிகவும் அதிகரிக்கும் என ஆதித்யா பிர்லா நிறுவனத்தின் சில்லரை வர்த்தக பிரிவின் தலைமை செயல் அதிகாரி தாமஸ் வர்கீஸ் தெரிவித்தார்.